**MINUTES OF THE PUBIC HEARING MEETING CONDUCTED FOR OBTAINING THE EVIRONMENTAL CLEARANCE FROM THE MINISTRY OF ENVIRONMENT, FOREST AND CLIMATE CHANGE FOR THE PROPOSED ROUGH STONE QUARRY OF THIRU. S. SATHISH NARAYANAN OF 1.00.0 HEC (TOTAL CLUSTER AREA 5.30.0 HEC) LOCATED IN S.F.NO. 45/2C (PART-6), ATTHIPADI VILLAGE, TIRUVANNAMALAI TALUK, TIRUVANNAMALAI DISTRICT, HELD ON 18.12.2021 AT 10.30 AM IN M/S. KS CHITRA MAHAL, KUNGILIYANATHAM VILLAGE, VANAPURAM POST, THANDRAMPATTU TALUK, TIRUVANNAMALAI DISTRICT.**

Present:

| | | |
|---|---|---|
| 1. | Dr. M. Priyadharshini | District Revenue Officer,<br>Tiruvannamalai District,<br>Tiruvannamalai. |
| 2. | Thiru.T.P.Viswanathan | District Environmental Engineer,<br>Tamilnadu Pollution Control Board,<br>Tiruvannamalai. |
| 3. | Dr.S.Sugashini | Assistant Engineer,<br>Tamilnadu Pollution Control Board,<br>Tiruvannamalai. |
| 4. | Thiru. Rajaganapathi | The Consultant,<br>M/s. Hubert Enviro Care system (P) Ltd<br>Chennai. |
| 5. | Publics and Environmentalists | 41 persons (list enclosed). |

**The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai.**

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai has welcomed the District Revenue officer, Tiruvannamalai, General Public, Environmentalists and other Government Officials for the Public Hearing meeting for the proposed rough stone quarry.

For obtaining the environmental clearance from the State Environment Impact Assessment Authority, the public hearing meeting is being conducted today for the proposed quarry of M/s. S. Sathish Narayanan_Rough Stone and Gravel Quarry in 1.00.0 hect at Atthipadi Village, Tiruvannamalai_Taluk, Tiruvannamalai District.

As per the Environment (Protection) Act and the Environmental Impact Assessment Notification 2006, it is mandatory to conduct public hearing where the opinions of the public will be obtained through oral/or in written statement, the happenings will be recorded and will be submitted to the State Environment Impact

Assessment Authority for the mining projects (Individual or Cluster extent) above 5 hect of area. The public notice for this public hearing scheduled on 18.12.2021 was published in the Times of India & Dinakaran on 16.11.2021 with the approval of the District Collector, Tiruvannamalai for the proposed quarry of M/s. S. Sathish Narayanan_Rough Stone and Gravel Quarry.

Further, the District Environmental Engineer has informed that proposed quarry project and Environmental Impact Assessment Study report details will be explained through a power point presentation. After that, public can express their views, suggestions and comments one by one either in oral or in written on the said project. The opinions & suggestions of the public's & Environmentalist will be recorded and submitted to the Environment Impact Assessment Authority.

**Presentation by Mr. Rajaganapathi, The Consultant, M/s. Hubert Enviro Care system (P) Ltd,.**

Mr. Rajaganapathi, the Consultant, M/s. Hubert Enviro Care system (P) Ltd has welcomed the District Revenue Officer, the District Environmental Engineer, General Public, Environmentalists and other Government Officials on behalf of the project proponent and explained the details of the project with help of power point presentation.

**Assistant Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai.**

Assistant Engineer, TNPCB has requested the public to express their views/suggestions/comments in oral or written statement one by one after giving their name and address.

**1. Thiru. Sathish, Athipadi Village.**

He informed that,

If quarry comes to our village, 30 people from our village will get jobs. The panchayat president will take the gravel in our village and pave the roads well. He said it would be good if a stone quarry come to our village.

**2. Thiru. Annamathagaram, Athipadi Village.**

He informed that,

Quarries were operated in our village for the past 15 years. Three or four village presidents have served in our village so far .The quarry fund of Rs 36 lakhs. received so far. There are two, three quarries and a paper mill. But not a single rupee was given to our panchayat. Everything that comes to the panchayat is spent to the Pazhaiyanur panchayat.No one objected to this, they are afraid to oppose. No

one listens to what we say. How many times we ask, they are not helping us. Come and see the roads, the bridge is damaged and they are using the same way with the stone in the middle. Ask him, his company vehicle is going the same road. No work has been done to repair the bridge. For fifteen or sixteen years there is a paper mill, two or three quarries, but not a single road has been laid to our village. He said that nothing has been done so far. He said that all the Panchayat money is being spent to Pazhaiyanur only. He said, if we asked for omelet area means, they told put the egg and eat. He concluded his speech, do something.

**Thereafter no views/comments were raised.**

**The Assistant Engineer, TNPCB, Tiruvannamalai.**

This public hearing process was ended with the vote of thanks by Assistant Engineer, Tamilnadu Pollution Control Board, Tiruvannamalai.

**Enclosures:**

1. Copy of press release (Public Notice published in the daily News paper Tamil & English dated 16.11.2021 for notifying the public hearing meeting.
2. The certificate issued by the Village Administrative Office for the Tom Tom and issue of notices.
3. Attendance sheet at the public hearing (Total pages 3 & 41 persons).
4. Audio & Video (DVD – Disc 1) of the public hearing proceedings.
5. Photographs of the public hearing proceedings.
6. Soft and Hard copies of EIA Report, Executive Summary in English & Tamil, submitted by the Project Proponent.
7. Petitions received through E-mail, Postal and in the meeting - 2 numbers.
    a. Petition received during the meeting, on non-allocation of funds to Pazhaiyanur Panchayat.
    b. Objection petition received through email on 19.12.2021 and registered post with acknowledgement due on 21.12.2021 as per G.O. 295/03.11.2021, to the quarry since there is a reserved forest located within 180 M distance.

District Environmental Engineer,
Tamilnadu Pollution Control Board,
Tiruvannamalai.

District Revenue Officer,
Tiruvannamalai.

திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை வட்டம், அத்திப்பாடி கிராமம் புல.எண். 45/2C (பகுதி -6), 1.00.0 ஹெக்டேர் (மொத்த கூட்டு பரப்பளவு 5.30.0 ஹெக்டேர்) பரப்பளவில் உத்தேசிக்கப்பட்டுள்ள திரு.செ.சதீஷ் நாராயணன் கல் குவாரி நடத்த மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்தின் சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 18.12.2021 அன்று தி/ள். KS சித்ரா திருமண மண்டபம், குங்கிலியநத்தம் கிராமம், வானாபுரம் அஞ்சல், தண்டராம்பட்டு வட்டம், திருவண்ணாமலை மாவட்டத்தில் காலை 10.30 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புரை கூட்ட அறிக்கை விபரங்கள்.

பங்கேற்றவர்கள்.

| | | |
|---|---|---|
| 1. | மரு. மு. பிரியதர்ஷினி | மாவட்ட வருவாய் அலுவலர்,<br>திருவண்ணாமலை மாவட்டம்,<br>திருவண்ணாமலை. |
| 2. | திரு.தி.ப.விஸ்வநாதன் | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருவண்ணாமலை. |
| 3. | முனைவர்.சி.சுகாஷினி | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருவண்ணாமலை. |
| 4. | திரு. ராஜகணபதி | ஆலோசகர்<br>தி/ள்.ஹியூபர்ட் என்விரோ கேர் சிஸ்டம் பிரைவேட் லிமிடெட், சென்னை. |
| 5. | பொதுமக்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் | 41 (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது) |

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள் சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு நடைபெறும் பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு தலைமைவகிக்கும் மதிப்பிற்குரிய மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களையும், பங்கேற்க வந்துள்ள பொதுமக்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், பிற துறையைச் சேர்ந்த அரசு அதிகாரிகள் அனைவரையும் மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சார்பாக வருக வருக என வரவேற்றார்.

திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை வட்டம், அத்திப்பாடி கிராமத்தில் 1.00.0 ஹெக்டர் பரப்பளவில் தி/ள். செ.சதீஷ் நாராயணன் கல் குவாரி நிறுவனமானது கல் குவாரி வெட்டி எடுக்க மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின்

சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் இன்று நடைபெற உள்ளது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை 2006ன் படி தனியாகவோ அல்லது கூட்டாகவோ 5.00 ஹெக்டர் பரப்பளவிற்கு மேல் உள்ள கல் குவாரி சுரங்கத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி பெற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடத்தி பொதுமக்கள் மற்றும் சமூகநல ஆர்வலர்களிடம் கருத்துக்களை எழுத்து மூலமாகவோ, வாய் மொழி மூலமாகவோ பெற்று அதனை பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்ப வேண்டியது அவசியமாகும். இது தொடர்பாக மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலின்படி தி/ள். செ.சதீஷ் நாராயணன் கல் குவாரி நிறுவனத்தின் கல் குவாரி சுரங்கத்துக்கு பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் தி/ள். KS சித்ரா திருமண மண்டபத்தில் 18.12.2021 அன்று காலை 10.30 மணியளவில் நடைபெறுமென டைம்ஸ் ஆப் இந்தியா மற்றும் தினகரன் செய்திதாள்களில் 16.11.2021 அன்று பொது அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இக்கூட்டத்தில் தொழிற்சாலை நிர்வாகத்தினர் தொடங்க உள்ள தொழிற்திட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு சம்பந்தமான விவரங்களை உங்களுக்கு விரிவாக எடுத்துரைப்பார்கள். அதன் பின்னர் பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் தங்களது கருத்துக்களை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ தெரிவிக்கலாம். பொதுமக்கள் தங்கள் பெயர், ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை தெரிவிக்க வேண்டும். தங்களுடைய கருத்துக்களை முறையாக பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பிவைக்கப்படும் என தெரிவித்தார்.

<u>திரு. ராஜகணபதி, ஆலோசகர், தி/ள். ஹியூபர்ட் என்விரோ கேர் சிஸ்டம் பிரைவேட் லிமிடெட்.</u>

திரு. ராஜகணபதி, ஆலோசகர் அவர்கள் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களுக்கும், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களுக்கும், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், பிறத்துறையைச் சேர்ந்த அரசு அதிகாரிகள் மற்றும் பங்கேற்க வந்துள்ள பொதுமக்கள் அனைவரையும் தி/ள்.ஹியூபர்ட் என்விரோ கேர் சிஸ்டம் பிரைவேட் லிமிடெட், சென்னை நிறுவனத்தின் சார்பாக பணிவுடன் வரவேற்று நிழற்பட விளக்க காட்சி மூலம் உத்தேசிக்கப்பட்டுள்ள தொழிற்திட்டம் பற்றி விரிவாக எடுத்துரைத்தார்கள்.

<u>உதவி பொறியாளர்.</u>

தற்போது பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துகள் பதிவு செய்யும் முன் பொதுமக்கள் தங்கள் பெயர், தங்கள் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு கருத்துக்களை தெரிவிக்கலாம் என்று தெரிவித்தார்.

அதன்படி பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை கீழ்க்கண்டவாறு தெரிவித்தனர்.

<u>1.திரு.சதீஷ், அத்திப்பாடி கிராமம்.</u>

இவர் கூறுகையில்,

எங்கள் ஊருக்கு குவாரி வந்தால், எங்கள் ஊர் மக்கள் 30 பேருக்கு வேலை கிடைக்கும். எங்கள் ஊர் கிராம சாலைக்கு பஞ்சாயத்து தலைவர் ஜல்லி எடுத்து சாலைகள் நன்றாக அமைத்து தருவார். எங்கள் ஊருக்கு கல் குவாரி வந்தால் நல்ல விதமாக இருக்கும் என தெரிவித்தார்.

<u>2.திரு.அன்னமதகரம், அத்திப்பாடி கிராமம்.</u>

இவர் கூறுகையில்,

எங்கள் ஊரில் 15 வருடங்களாக குவாரி வைத்து நடத்தி வருகின்றனர். எங்கள் ஊருக்கு இதுவரைக்கும் மூன்று நான்கு தலைவர்கள் வந்து இருக்கிறார்கள், இந்த வருடம் வரை எங்கள் பஞ்சாயத்து நிதியில் 36 லட்சம் வந்திருக்கிறது. இரண்டு, மூன்று குவாரிகள், ஒரு காகித தொழிற்சாலை இருக்கிறது. ஆனால் ஒரு ரூபாய் கூட எங்கள் பஞ்சாயத்திற்கு கொடுக்கப்படவில்லை. பஞ்சாயத்திற்கு வருவது அனைத்தையும் பழையனூர் பஞ்சாயத்திற்கே செய்து விடுகிறார்கள். இதை யாரும் எதிர்த்து கேட்பதில்லை, கேட்க பயப்படுகிறார்கள். எல்லாரும் அவர்களிடம் சொன்னாலும் கேட்கவில்லை. நாங்கள் எவ்வளவு சொன்னாலும், எங்கள் ஊருக்கு உதவி செய்வதில்லை என தெரிவித்தார். சாலைகளை வந்து பாருங்கள், பாலம் உடைந்து நடுவில் கல் வைத்து அதே வழியில் சென்று வருகின்றனர். அவரை கேளுங்கள் அவரின் நிறுவன வாகனமும் அந்த வழியில் தான் செல்கிறது என கூறினார். பாலத்தினை சரி செய்யும் வேலை எதுவும் செய்யப்படவில்லை. பதினைந்து பதினாறு வருடங்களாக காகித தொழிற்சாலை, இரண்டு மூன்று குவாரிகள் உள்ளன. ஆனால் எங்கள் ஊருக்கு ஒரு சாலை கூட அமைத்து தரப்படவில்லை. எதுவும் இதுவரை செய்யவில்லை என தெரிவித்தார். வரும் பஞ்சாயத்து பணம் அனைத்தும் பழையனூரிலேயே செலவழிக்கப்படுகிறது என கூறினார். ஆம்லேட்

ஏரியா வேண்டும் என்றால் முட்டை போட்டு சாப்பிடுங்கள் என்கிறார்கள். எதாவது செய்யுங்கள் என்று கூறி நிறைவு செய்தார்.

பின்னர் கருத்துக்கள் எதுவும் பெறப்படவில்லை.

<u>உதவி பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை.</u>

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்து இக்கூட்டம் நிறைவு பெறுகிறது என்று உதவி பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை கூறினார்.

<u>இது தவிர கீழ்கண்ட விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.</u>

1. பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்ட விவரம் பத்திரிக்கை வெளியீட்டின் நகல்(தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளேடுகள், நாள்.16.11.2021).
2. துண்டுபிரசுரம் மற்றும் தண்டோரா அறிவிப்பு - கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்ட சான்று.
3. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு கலந்துகொண்டவர்களின் வருகை பதிவேடு (3 பக்கங்கள் 41 நபர்கள்).
4. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் குறுந்தகடு (DVD).
5. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின்போது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு.
6. திட்ட நிறுவனத்தாரால் சமர்பிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை மற்றும் திட்ட சுருக்கம் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).
7. தபால், மின்னஞ்சல் மற்றும் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பெறப்பட்ட 2 மனுக்கள்.
   அ. பழையனூர் பஞ்சாயத்துக்கு உரிய நிதி பெறப்படவில்லை குறித்து கூட்டத்தின் போது பெறப்பட்ட மனு.
   ஆ. அரசாணை எண். 295/03.11.2021 படி 180 மீ தூரத்திற்குள் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதி இருப்பதால், குவாரிக்கு ஆட்சேபனை தெரிவித்து 19.12.2021 அன்று மின்னஞ்சல் மற்றும் 21.12.2021 அன்று ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவு தபால் மூலம் பெறப்பட்ட மனு.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
திருவண்ணாமலை.

மாவட்ட வருவாய் அலுவலர்,
திருவண்ணாமலை.